www.lkedu.lk

2020ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான,

நுண்ணறிவு பயிற்சி வினாக்கள்



"கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல உன்னை தூங்கவிடாமல் செய்வதே."

- அப்துல் கலாம் -

ஆசிரியர் – இ.றஞ்சித் .மொறாய்ஸ்

வங்காலை மன்னார்.

தொலைபேசி இலக்கம் – 0772402514

www.lkedu.lk

www.lkedu.lk

தரப்பட்ட மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது

01. ஆடு, நாய், கோழி, பூனை, தாரா, சிங்கம்

1) சிங்கம் 2) தாரா 3) ஆடு

02. ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்

1) ஏப்ரல் 2) ஜூன் 3) பெப்ரவரி

03. சதுரம், கனவுரு, சதுரமுகி, செவ்வகம், நான்முகி, பெட்டி

1) பெட்டி 2) நான்முகி 3) சதுரம்

06. சாகரம், நீர், பரவை, புள், கடல், பட்சி

1) புள் 2) நீர் 3) கடல்

தரப்பட்ட வினாக்களில் ஒன்றை நீக்குவதன் மூலம் ஏனையவற்றை ஒரு கூட்டமாக்கலாம். அக் கூட்டத்தைச் சேராதது யாது?

05. நட்சத்திரம், சந்திரன், சூரியன், வானவில், கோள்

1) சூரியன் 2) கோள் 3) வானவில்

06. உணவு, ஊன், ஆகாரம், ஊண்

1) உணவு 2) ஊண் 3) ஊன்

பின்வரும் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான விடையினைத் தெரிவு செய்க.

07. சூரியன் மேற்குத் திசையில் உதிக்கும்.

1. இது பெரும்பாலும் நிகழும்.
2. எப்பொழுதும் நிகழும்.
3. நிச்சயமாக நிகழாது.

08. கோயிலுக்கு கிழக்கே தபாலகம் உள்ளது. தபாலகத்திற்கு தெற்கே குளம் உள்ளது. எனவே

1. குளத்திற்கு வடக்கே தபாலகம் உள்ளது.
2. கோயிலுக்குத் தெற்கே குளம் உள்ளது.
3. குளத்திற்குக் கிழக்கே கோயில் உள்ளது


09 தென்னந் தோட்டம் ஒன்றில் தை, மாசி, பங்குனி மாதங்களில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை முறையே 200, 275, 350 ஆகும். எனவே சித்திரை, வைகாசி மாதங்களில் பறிக்கக் கூடிய தேங்காய்களின் எண்ணிக்கையாக இருக்கக் கூடியது

1. 400, 450 2. 425, 500 3. 375, 450

E.RANJITH.MORAIES

www.lkedu.lk


www.lkedu.lk



10. பின்வரும் முழு உருவின் 4/5 பங்கை நிழற்றுவதற்கு இன்னும் எத்தனை சிறிய சதுரங்கள் வேண்டும் என்பதைத் தெரிவு செய்க.

1. 8 2. 9 3. 5

11.



இவ்வுருவில் காணப்படும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முக்கோணிகளின் எண்ணிக்கையும்முறையே

1.7, 12 2. 8, 8 3. 4, 4

12. ஒரு தொட்டியின் கொள்ளளவு 14 லீற்றர் ஆகும். பூவிழி ஒரு தடவைக்கு 4 லீற்றர் வீதம் இட்டு அத் தொட்டியில் நீரை நிரப்புகின்றார். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவளுடைய நண்பி அந் நீரில் 2 லீற்றர் வீதம் வெளியே எடுகின்றாள். பூவிழி எத்தனை தடவை நீரை இட்ட பின்னர் முதன்முதலாகத் தொட்டி நிரம்பும்?

1. 6 2. 5 3. 7

13. ராமனின் தற்போதைய வயது அவனது தந்தையின் வயதின் 1/5 பங்காகும். ராமனின் வயது 8 எனின், தந்தையின் வயது யாது?

1. 30 2. 40 3. 6

14. "உள்ளதை உள்ளபடி கூறப் போனால் பலரைப் பகைக்க நேரிடும்." இக் கருத்தை உணர்த்தும் பழமொழி யாது?

1. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்˙ இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்.
2. எதார்த்தவாதி வெகுசன விரோதி.
3. ஏழை சொல் அம்பலம் ஏறாது

15. 100g பருப்பின் விலை ரூபாய் - ரூ 20.00

1/2 Kg கடலையின் விலை - ரூ 120.00

3 Kg கௌப்பியின் விலை - ரூ 660.00

ஒரு kg இற்குரிய விலைகளின் படி இறங்கு வரிசைப்படுத்தி எழுதினால்,

1. கடலை, கௌப்பி, பருப்பு
2. கௌப்பி, கடலை, பருப்பு
3. பருப்பு, கௌப்பி, கடலை

16. 4m நீளமும் 4m அகலமும் கொண்ட சுவருக்கு நிறம் பூச 2 லீற்றர் பூச்சு தேவைப்படுகிறது. 8m நீளமும் 21m அகலமும் கொண்ட இரண்டு சுவர்களுக்கு பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?

1. 6 லீற்றர் 2. 4 லீற்றர் 3. 1 லீற்றர்

E.RANJITH.MORAIES

www.lkedu.lk

www.lkedu.lk

www.lkedu.lk

3Kg 650g A	2Kg 850g B

17. A, B ஆகிய இரு பைகளில் அரிசி உள்ளது. A பையில் உள்ள அரிசியை 4Kg 500g ஆக்குதவற்கு B பையில் இருந்து எடுக்க வேண்டிய அரிசியின் அளவு யாது?

1. 850 g 2. 350g 3. 650g

18. கீழுள்ள இலக்கங்களின் நிரையில் ஒரு தடவை மாத்திரம் வந்துள்ள இலக்கங்களைப் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

5	6	8	9	7	3	2	5	8	9	2	3

1. 25 2. 42 3. 72

19. பிழையான கணிதச் செய்கையினைத் தெரிவு செய்க.

1. 7 X 6 + 7 = 49 2. 25 + 18 - 10 = 23 3. 6 X 4 + 10 = 3 4

20. கந்தன் அன்னாசிப்பழத்தை மட்டும் விரும்புகிறான். சோமன் அன்னாசிப்பழத்தையும் வாழைப் பழத்தையும் விரும்புகிறான். அரவிந்தன் வாழைப்பழத்தை மட்டும் விரும்புகிறான். இங்கு வாழைப்பழத்தை விரும்புகிறவர்கள் எத்தனை பேர்?

1. 3 2. 2 3. 1

21. ஒரு புகையிரதம் 25 ஆவது கிலோமீற்றர் கல்லிலிருந்து 31 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு 6 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதியில் சென்றால் 62 ஆவது கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் எடுக்கும்?

1. 30 நிமிடம் 2. 31 நிமிடம் 3. 32 நிமிடம்

22. 21 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்திற்கு உரிய ஆண்டு

1. 2007 2. 2037 3. 2017

23. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 10 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 30 2. 20 3. 4

24. தரப்பட்ட பாடலை வாசித்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

இரந்துண்டு வாழும் வாழ்வை
இன்றோடு விட்டொதுக்கி
கரமுண்டு கலப்பையுண்டு
கடிதெழு களைவிட்டு

இப் பாடலில் விளக்குவது

1) உற்பத்தி செய்தல் 2) வியாபாரம் செய்தல் 3) விவசாயம் செய்தல்

E.RANJITH.MORAES
www.lkedu.lk
www.lkedu.lk

www.lkedu.lk

25. இப் பாடலில் வரும் கரம் என்ற சொல்லின் ஒத்தபதம் யாது?

1) கை 2) ஏர் 3) கடிகாரம்

26. இவ்வுருவில் காணப்படும் செவ்வகங்களின் எண்ணிக்கை

1) 11 2) 12 3) 13

27. கரும்பு - இனிப்பு எனின் உப்பு


1) கசப்பு 2) புளிப்பு 3) உவர்ப்பு

28. ஒரு பெட்டியில் 19 மாம்பழங்கள் உண்டு. அவற்றில் இருந்து நீர் 11 மாம்பழங்களை எடுத்துக் கொண்டால் உம்மிடம் காணப்படும் மாம்பழங்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதினால்

1) xi 2) viii 3) x

30. பின்வரும் உருக்கோலத்தில் அருகருகே ஒரே நிறம் அமையாதவாறு நிறம் தீட்டப்பட வேண்டும். அவ்வாறு நிறம் தீட்டுவதற்குத் தேவையான நிறங்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை

1) 6 2) 3 3) 4



www.lkedu.lk

31. "வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்" என்ற கருத்தை ஏற்கும் பழமொழியாக இருக்கக் கூடியது

1) பசி வந்தால் பத்தும் பறக்கும்

2) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

32. 21ம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தத்தில் உள்ள ஆண்டாக அமைவது

1) 1964 2) 2067 3) 2076

33. தனது பாடநூல் ஒன்றினைப் பார்க்கும் போது அங்கு கமல் எனும் மாணவன் முறையே 18, 19, 24, 25, 69, 70 பக்கங்களினை காண முடியவில்லை. புத்தகத்தில் கிழிக்கப்பட்ட கடதாசித் தாள்கள் எத்தனை?

1) 4 2) 5 3) 6

34. ஒரு புத்தகத்திற்கு எப்போதும் இருப்பது

1) பாடங்கள் 2) படங்கள் 3) பக்கங்கள்

www.lkedu.lk

35. ஒரு பெட்டியில் உள்ள முட்டைகளில் 1 தடவையில் 5 முட்டைகள் எடுக்கும் சந்தர்ப்பத்தில் 2 முட்டைகள் பழுதடைந்து காணப்பட்டது. பெட்டியில் உள்ள முட்டைகளில் பழுதடைந்த முட்டைகள் 16 எனின் ஆரம்பத்தில் பெட்டியில் இருந்த முட்டைகள் எத்தனை?

E.RANJITH.MORAIES

www.lkedu.lk


1) 48 2) 40 3) 15

36. குமாரின் வயது 4 ஆக இருக்கும் போது கமலின் வயது அவரின் வயதின் மூன்று மடங்காக காணப்பட்டது. இன்னும் எத்தனை ஆண்டுகளின் பின் குமாரின் வயதின் இருமடங்காகும்

1) 4 ஆண்டுகளில் 2) 6 ஆண்டுகளில் 3) 12 ஆண்டுகளில்

37. இதில் 8 சதுரமுகிகள் அடுக்கப்பட்டு சுற்றி வர மை பூசப்பட்டு தனிக்கட்டைகளாகப்பட்ட போது, மை பூசப்படாத பக்கங்கள் எத்தனை?

1) 2 2) 24 3) 16



38. ஒரு தொட்டியில் காணப்படும் பூக்கள் ஒவ்வொருநாளும் இரட்டிப்பாகும் தன்மை கொண்டது. அத்தொட்டியில் 5 பூக்கள் முதலில் காணப்பட்டது. 20வது நாள் அத்தொட்டி முற்று முழுதாக நிரம்பிக் காணப்பட்டது. அத்தொட்டி பூக்களால் அரைவாசி நிரம்ப எடுத்துக்கொண்ட நாட்கள்

1) 19 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 4 நாட்கள்

39. முச்சக்கர வண்டிகளும் கார்களுமாக 12 இருந்தன. அவற்றில் காணப்படும் சில்லுகளின் எண்ணிக்கை 39 எனின், அங்குள்ள கார்களின் எண்ணிக்கை

1) 3 2) 9 3) 8

40. கமலி கடற்கரையோரமாக செல்லும் போது அவளது நிழலானது அவளது வலது கைப்பக்கமாக விழுந்தது எனின், அவள் செல்லும் திசையாக அமையாதது

1) தெற்கு 2) வடக்கு 3) மேற்கு

41. சங்கரிடம் 50 ரூபாய், 20 ரூபாய், 10 ரூபாய் தாள் காசுகள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை 4 எனின், அவற்றின் பெறுமதி ரூபாய் 100 எனின், ரூபாய் 10 தாள் காசுகளின் எண்ணிக்கை

1) 1 2) 2 3) 4

42. மாணவன் ஒருவன் ஓர் எண்ணில் இருந்து 70 ஐ கூட்டுவதற்கு பதிலாக தவறுதலாக 70 ஐ கழித்துவிட்டான். அப்போது பெறப்பட்ட விடை 140 எனின், உண்மையில மாணவன் பெற வேண்டிய விடை

1) 210 2) 280 3) 70

43. சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, கறுப்பு என்னும் ஐந்து நிற கீற்றுக்களைக் கொண்ட கொடி உருவில் தரப்படுகிறது.

1	2	3	4	5

மூலவர்ணங்கள் அருகருகே அமையப் பெறவில்லை

வெள்ளையில் இருந்து 4வதாக மஞ்சள் கொடியும்

சிவப்புக் கொடிக்கும் மஞ்சள் கொடிக்கும் இடையில் கறுப்பு கொடியும் உள்ளது.

நான்காவதாக கறுப்பு கொடியுள்ளது ஆகவே

E.RANJITH.MORAIES

www.lkedu.lk

www.lkedu.lk

44.கொடிக்கீற்றில் 1வது, 3வது கொடி நிறங்கள் முறையே.

1) நீலம், மஞ்சள் 2) நீலம் , சிவப்பு 3) சிவப்பு, கறுப்பு

45.குமாரின் தந்தையின் தந்தைக்கும் குமாரின் தம்பிக்குமிடையே உள்ள உறவு முறை யாது?

1) மாமாவும் மருமகனும்.

2) பாட்டனும் பேரனும்

3) சிறிய தகப்பனும் மகனும்

46.. நூல், பனுவல், புத்தகம், புனல் என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

1) புனல் 2) நூல் 3) பனுவல்

47. "முப்பத்தையாயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?

1) 35742 2) 24753 3) 24735

48. ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களும் யாது?

1) 4.00 உம் 6.00 2) 12.15 உம் 6.15 உம் 3) 3.00 உம் 9.00 உம்

"சிறுவர் விரும்பும் குடைகள்
சின்னஞ் சிறிய குடைகள்
பெரியோர் விரும்பும் குடைகள்
பெறுமதி மிக்க குடைகள்.""

49. இப் பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது

1) குடை 2) சிறுவர் 3) அழகு

50. "பெறுமதி" என குறிப்பிடப்படுவது?

1) செல்வாக்கு 2) அழகு 3) பயன்

51. கண்ணன் நிமலனிலும் உயரம் குறைந்தவன், கமல் கண்ணனிலும் உயரம் குறைந்தவன். இதற்கேற்ப சரியான கூற்று

1) நிமலனிலும் கமல் உயரம் கூடியவன்.

2) கண்ணன், நிமலன், கமல் மூவரிலும் யார் உயரம் கூடியவர் என கூறுவது கடினம் .

3) கண்ணன், கமல் இருவரிலும் பார்க்க நிமலன் உயரம் கூடியவன்.

52. பாடசாலைப் பிள்ளைகளின் கலைவிழா ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து மூன்று நாட்கள் நடைபெற்றதெனின் முடிவடைந்த நாள் யாது?

1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை.

53. 1 தொடக்கம் 10 வரை எண்களை எழுதும் போது எழுதப்படும் இரட்டை எண்கள் எத்தனை?

1) 10 2) 06 3) 05

ERANJITH.MORAIES

www.lkedu.lk

www.lkedu.lk

www.lkedu.lk

54. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

கப்பல் : மாலுமி எனின், பேருந்து : .....

1) சாரதி 2) நடத்துநர் 3) விமானி

55.ஓர் ஆடியில் மாற்றமின்றி விம்பமாகக் காட்சி தரும் எழுத்துக்கள்

1) ZL 2) AT 3) PS

56. சரியான கோவையைத் தெரிவு செய்க.

1) 6 x 8 + 8 = 58 2) 7 x 7 x 2 = 99 3) 66 - 33 + 10 = 43

57. இரு பகுதியும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1) A E I O U = A I E O U

2) C D E F I = C D E I F

3) M N O P Q = M N O P Q

58. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் முதலில் முற்பகல் 5.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரு சந்தர்ப்பங்களைத் தரும் நேரங்கள்.

1) மு. ப 8.00 உம் மு. ப. 11.00 உம்

2) மு. ப. 9.00 உம் பி.ப 1.00 உம்

3) மு. ப 8.00 உம் பி.ப 10.00 உம்

59. கண்ணனிடம் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ரூ. 28 உள்ளது. அதில் இருக்கத்தக்க ஐந்து ரூபாய் நாணயங்களில் எண்ணிக்கை யாது?

1) 5 2) 4 3) 6

60. ஒரு ஆண்டில் அடுத்தடுத்து 31 நாட்களைக் கொண்ட மாதங்கள்

1) ஏப்ரல், மே 2) யூன், யூலை 3) யூலை, ஓகஸ்ட்

61. ஒரு நிரையில் ரமேஸ் தொடக்கத்திலிருந்து 11 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 9 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1) 19 2) 18 3) 20

62. அந்நிரையில் சுரேஸ் 7 ஆவதாக நின்றால் அவனுக்குப் பின்னால் எத்தனை பேர் நிற்கின்றனர்?

1) 13 2) 12 3) 11

63. நாம் பத்திரிகைகளை வாசிப்பதன் பிரதான காரணம்

1) செய்திகளை அறிவதற்காக

2) பொழுது போக்கிற்காக

3) வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதற்காக

E.RANJITH.MORAIES

www.lkedu.lk

www.lkedu.lk

www.lkedu.lk

64. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 20km தூரம் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 120 கிலோ மீற்றர் சென்றது. எஞ்சியி ருக்கும் பெற்றோலின் அளவு யாது?

1) 4 லீற்றர் 2) 5 லீற்றர் 3) 8 லீற்றர்

65. என்னிடம் ஊதா, கறுப்பு, பச்சை, நிறப் பென்சில்கள் உண்டு. எனது நண்பன் நாதனிடம் நீலம், பச்சை, ஊதா நிறப் பென்சில்கள் உண்டு. நாதனின் தம்பியிடம் சிவப்பு. பச்சை, ஊதா நிறப் பென்சில்கள் உண்டு. நானோ எனது நண்பன் நாதனோ வைத்திருக்காத எந்த நிறப் பென்சில் நாதனின் தம்பியிடம் உண்டு?

1) கறுப்பு 2) பச்சை 3) சிவப்பு

67. "விருந்தோம்பல்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக் கூடிய ஒரு சொல்,

1) விருந்து 2) தோல்வி 3) மருந்து

68. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

நகை : தங்கம், கத்தி : இரும்பு போல துணி : .....

1) சட்டை 2) நூல் 3) தையல் இயந்திரம்

69. கடையொன்றில் கணினி பி.ப 1.00 தொடக்கம் பி.ப 2.45 வரைக்கும் தொலைக்காட்சி பி.ப 1.45 தொடக்கம் பி.ப 3.15 வரைக்கும் மின்விசிறி பி.ப 1.30 தொடக்கம் பி.ப 3.00 வரைக்கும் தொழிற் பட்டன. மூன்று உபகரணங்களும் ஒரே வேளையில் தொழிற்பட்ட நேரம்,

1) 1 மணித்தியாலம் 2) 45 நிமிடம் 3) 1 மணி 15 நிமிடம்

70. 2017 ஆம் ஆண்டின் தை மாதம் 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், அவ்வருடத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

1) 52 2) 53 3) 51

71. செங்கதிர் பொங்கி வருவதுண்டு - நல்ல
செந்தாமரைகள் மலர்வதுண்டு மங்கையே
காலைப்பொழுதை யுணர்த்திட
மற்றும் கடிகாரம் - வேண்டுமோடி!

இப்பாடல் கூறும் பிரதான கருத்து,

1) காலைப் பொழுதின் சிறப்பு
2) தாமரை சூரியனை வரவேற்றல்.
3) பொழுதை அறிந்திட மணிக்கூடு தேவை

72. செங்கதிர் பொங்கி வருதல் என்பதன் கருத்து,

1) வெண்ணிறமான ஒளி எங்கும் பரவுதல்.
2) சிவந்த ஒளிக்கீற்றுக்கள் மேலெழுதல்.
3) மஞ்சள் நிற ஒளி எங்கும் தோன்றுதல்.

E.RANJITH MORAIES
www.lkedu.lk

www.lkedu.lk

73. வினாடி வினாப் போட்டியொன்றில் 20 வினாக்கள் கேட்கப்பட்டன. சரியான விடை ஒன்றிற்கு 5 புள்ளிகள் வழங்கப்படும் என்பதும், பிழையான விடைக்கு 2 புள்ளிகள் கழிக்கப்படும் என்பதுவுமே நிபந்தனையாகும். ஒரு மாணவன் இப்போட்டில் 72 புள்ளிகள் பெற்றானாயின் சரியாகப் பதிலளித்த வினாக்கள்,

1) 16 2) 14 3) 19

74. ஒரு வாங்கில் இருவர் அமர்ந்திருந்தனர். அதில் ஒருவர் மற்றையவரின் மாமா. மற்றையவர் மாமாவின் மருமகனல்ல. அவ்வாறாயின் மற்றவருக்கும் அவருக்கும் உள்ள உறவு யாது?

1) மாமி 2) மகள் 3) மருமகள்

75. கடிகாரம் ஒன்று 4 மணியாகும் போது 4 தரம் மணி ஒலிக்க 3 செக்கன் எடுத்தது எனின், அது எட்டு மணிக்கு 8 தரம் மணி ஒலிக்க எத்தனை செக்கன் எடுக்கும்

1) 6 2) 7 3) 8

80. தொழிற்சாலை ஒன்றினை நிர்மாணிக்கும் பணியானது 2018 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக் கப்பட்டது. முதலாவது கட்டம் 15 மாதத்திலும் இரண்டாவது கட்டம் தொடர்ந்து 10 மாதத்திலும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது எனின், கட்டடம் கட்டி முடிக்கப்படும் ஆண்டு,

1) 2043 2) 2020 3) 2021

81. பின்வரும் பாடல் வரிகளை வாசித்து பொருத்தமான வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

A - குழந்தையை வையாதே பாப்பா.

B - ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.

C - கூடி விளையாடு பாப்பா - ஒரு

D - ஓடி விளையாடு பாப்பா – நீ

1) CADB 2) DACB 3) DBCA

82. இருபகுதிகளும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1) ஆறேலுர்வுகுநு - ஆஆேலுர்வுகுநு

2) 24437865 - 24437685

3) ஆரேஜடுறுஏவு - ஆரேஜடுறுஏவு

82. ஜலஜா ஓரிலக்க எண்ணொன்றை நினைத்தாள். அதனை நான்கால் பெருக்கி வரும் விடையை மூன்றால் வகுத்து அதனுடன் ஆறைக் கூட்டினாள். வந்த விடை 14 எனின், அவள் நினைத்த எண் யாது?

1) 4 2) 6 3) 7

83. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழியின் கருத்து

1) சிறிய மரம் ஒன்றைப் பெரிதானதும் வளைக்க முடியுமா?

2) ஐந்து வயதில் படித்தாலும் ஐம்பது வயதில் படிக்க முடியாது.

3) சிறுவயதில் திருத்த முடியாததை வளர்ந்த பின்னர் திருத்த முடியாது.

84. "இங்கே குளிப்பது ஆபத்தானது" எனக் குளத்தின் முன்னால் எழுதப்பட்டிருந்தது. இது

1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) அறிவுரை

E.RANJITH.MORAIES

www.lkedu.lk

85. வினாடிவினாப் போட்டியில் பங்குபற்றிய குழு ஒன்று தம்மிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அங்கு 66 கைகுலுக்கள் இடம்பெற்ற போட்டியில் கலந்து கொண்டோர் எத்தனை பேர்?

1) 11 பேர் 2) 12 பேர் 3) 33 பேர்

86. 29 ஆவது ஒலிம்பிக் போட்டி 2008ம் ஆண்டு நடைபெற்றது. 33 ஆவது ஒலிம்பிக் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெறும்?

1) 2020 2) 2026 3) 2024

87. றகித் புத்தகமொன்றில் 26ம் பக்கத்தில் இருந்து 95ம் பக்கம் வரை வாசித்தான். அவன் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?

1) 69 2) 70 3) 71

88. சரியாக எழுதப்பட்ட சொற்களைக் கொண்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க?

1) இலங்கை நீர்ப்பாசணத் திணைக்களம்

2) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்கழம்

3) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம்

89. எமது விளையாட்டுக் குழுவிலுள்ள எல்லா வீரர்களும் உயரமானவர்கள். பாலேந்திரன் உயரமானவன் எனின் ஷஷபாலேந்திரன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்" என்னும் கூற்று

1) சரியானது 2) பிழையானது 3) சரியாகக் கூற முடியாது

90. இப்போது எனக்கு வயது 11 வருடங்கள் எனது தம்பியின் வயது 4 வருடங்கள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதின் இருமடங்காக இருக்கும்?

1) 3 வருடங்களில் 2) 4 வருடங்களில் 3) 8 வருடங்களில்

91. ஐந்து ஆடு ஐந்து சாக்குப்புல்லை ஐந்து நாட்களில் சாப்பிடும் ஓர் ஆடு ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்.

1) 25 நாட்கள் 2) 5 நாட்கள் 3) 1 நாள்

92. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1) பூங்காக்கள் மனதிற்கு குதுகலத்தையும் ஆறுதலையும் அழிக்கும்

2) பூங்காக்கள் மனத்திற்கு குதூகலத்தையும் ஆறுதலையும் அளிக்கும்

3) பூங்காக்கள் மனதிற்கு குதூகலத்தையும் ஆறுதலையும் அளிக்கும்

93. என்னும் நான்கு சொல்லில் இருந்து ஓர் எழுத்து வீதம் பட்டம், பருப்பு, பந்தல், மதுரம் எடுத்து உருவாக்கக்கூடிய புதிய சொல் யாது?

1) பருமன் 2) பருந்து 3) பம்பரம்

94. விலங்குப் பண்ணை ஒன்றின் கோழிகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், மாடுகள் ஆகிய விலங்குகள் இருந்தன. அவற்றுள் வெள்ளாடுகளின் இருமடங்கான கோழிகளும் கோழிகளின் ¼ பங்கு மாடுகளும் இருந்தன. மாடுகளின் எண்ணிக்கையும் செம்மறியாடுகளின் எண்ணிக்கையும் சமம். வெள்ளாடுகளின் எண்ணிக்கை 100 எனின், பண்ணையில் இருந்த ஒவ்வொரு விலங்கினதும் மொத்த எண்ணிக்கையைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.

E RANJITH MORAIES

www.lkedu.lk

www.lkedu.lk

1) கோழி 200 வெள்ளாடு 100 செம்மறியாடு 50 மாடு 50

2) கோழி 200 வெள்ளாடு 100 செம்மறியாடு 25 மாடு 50

3) கோழி 200 வெள்ளாடு 100 செம்மறியாடு 75 மாடு 50

95. 2017 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் 2 , 9, 16, 23, 30 ஆகியன வியாழக்கிழமைகளின் இந்த எண்களின் கூட்டுத்தொகை 80 ஆகும். இம்மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் வரும் திகதகளின் கூட்டுத்தொகை யாது?

1) 54 2) 75 3) 85

96. ஒரு மாதத்தின் பத்தாம் நாள் திங்கட்கிழமைக்கு முந்திய நாள் வருகிறது. அம்மாதத்தின் முதலாம் முப்பதாம் நாட்கள் முறையே என்ன கிழமைகளில் வரும்?

1) ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை

2) சனிக்கிழமை, திங்கட்கிழமை

3) வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை

98. கண்ணனிடம் பேனாவும், கடதாசியும், பென்சிலும், பந்தும் இருந்தன விமலனிடம் பேனாவும், கடதாசியும், பந்தும், புத்தகமும் இருந்தன. திலீபனிடம் பேனாவும், முத்திரையும், பென்சிலும், கடதாசியும் இருந்தன. தேவாவிடம் புத்தகமும், பென்சிலும், பேனாவும் முத்திரையும் இருந்தன. நால்வரிடமும் இருந்த பொதுவான பொருள் என்ன?

1) பேனா 2) கடதாசி 3) பென்சில்

99. மரக்கிளை ஒன்றில் ஒரு குறித்த தொகையான ஆரோக்கியமான கிளிகள் நின்றன. அவற்றில் தலைகளினதும் கால்களினதும் மொத்த எண்ணிக்கை 57 எனின் அந்த மரக்கிளையில் நின்ற கிளிகள் எத்தனை?

1) 16 2) 18 3) 19

100. ஒரு பாடசாலையின் விளையாட்டுப் போட்டியின் போது பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நான்கு இல்லங்களுக்குச் சொந்தமாக கூடாரங்கள் அமைக்கப்பட்டன. பச்சை இல்லத்திற்கு தென்மேற்குப் பக்கமாக 100m தூரத்தில் சிவப்பு இல்லம் அமைந்திருந்தது. சிவப்பு இல்லத்திற்கு வடமேற்கே 80m தூரத்தில் மஞ்சள் இல்லம் அமைந்திருந்தது. மஞ்சள் இல்லத்திற்கு வடகிழக்கே 100m தூரத்தில் நீல இல்லம் அமைந்திருந்தது. நீல இல்லத்திலிருந்து எத்திசையில் பச்சை இல்லம் அமைந்திருந்தது?

1) தென்மேற்கு 2) வடகிழக்கு 3) தென்கிழக்கு

EKANAYAKA MORAIES
www.lkedu.lk